# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பகிரங்க சேவையாளர்கள் (பொறுப்புகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1990 மாச்சு மாதம் 6 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1990, மார்ச்சு மாதம் 9 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 30* *தபாற் செலவு : ரூபா 1.00*

# 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பகிரங்க சேவையாளர்கள் (பொறுப்புக்கள்) (திருத்தச்) சட்டம்

[1990, மார்ச்சு மாதம் 06 ஆம் தேதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ—ஓ 63/89

## பகிரங்க சேவையாளர்கள் (பொறுப்புகள்) கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பகிரங்க சேவையாளர்கள் (பொறுப்புகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*103 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. பகிரங்க சேவையாளர்கள் (பொறுப்புகள்) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைப் உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

"(5அ) பகிரங்க சேவையாளரொருவருக்கெதிராக வலுவுக்கிட விழையும் பொறுப்பை ஒப்பந்தஞ்செய்வதற்கு முன், அவரது வாழ்க்கைத் தொழில் அல்லது தொழில் தொடர்பாக அவரிடம் கடன் கொடுப்பவரால் செய்யப்பட்ட ஏதேனும் விசாரணைக்கு மறுமொழியாக, அவர், ஒரு பகிரங்க சேவையாளரென கடன் கொடுப்பவருக்கு வெளிப்படுத்தத் தவறியுள்ள அல்லது அவரது வாழ்க்கைத் தொழில் அல்லது தொழில் பகிரங்க சேவையாளரொருவருடையதல்லாத வேறொன்று எனக் குறிப்பிட்டுள்ள பகிரங்க சேவையாளரொருவரால் ஒப்பந்தஞ் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் பொறுப்பிற்கு இப்பிரிவு ஏற்புடையதாகமாட்டாது".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.